2007 ஏப்ரல் 4]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. காவேரி.

**திரு. வை. காவேரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள், முதலில் பள்ளிக் குழந்தைகளுக்குக் கூடுதலாக ஒரு முட்டை வழங்கினார். மீண்டும் இப்பொழுது ஒரு கூடுதல் முட்டை வழங்கியிருக்கின்றார். பால் என்பது மிகவும் சத்துணவான பொருள். பள்ளிக் குழந்தைகளுக்குச் சத்துணவில் எப்படி முட்டை வழங்குகின்றார்களோ, அதேபோல் பாலும் வழங்கினால், ஒரே கல்லில் இரண்டு மாங்காய் என்பதுபோல், பால் உற்பத்தியாளர்களும் பயன்பெறுவார்கள்; பள்ளிக் குழந்தைகளும் பயன்பெறுவார்கள் என்பதைத் தங்கள்மூலமாகத் தெரிவிக்க விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. உ. மதிவாணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு நல்ல யோசனையைச் சொல்லியிருக்கிறார்கள். இதைப் பற்றி மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களிடம் ஆலோசனை செய்து, தக்க நடவடிக்கை எடுப்பதற்கு வாய்ப்பு இருப்பின், அது செய்யப்படும் என்பதைத் தங்கள்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 20, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. இராஜேந்திரன். மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் அவர்கள்.

**20—**

**விற்பனை நிலையம்**

***8921—திரு. க. இராஜேந்திரன்:**

மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தா. பழூர் பகுதியில் காதி விற்பனை நிலையம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. கா. ராமச்சந்திரன், கதர்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

[2007 ஏப்ரல் 4

(அ) தா. பழூர் பகுதியில் காதி விற்பனை நிலையம் அமைக்கும் உத்தேசம் ஏதும் அரசிடம் இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

**திரு. க. இராஜேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது ஜெயங்கொண்டம் சட்டமன்றத் தொகுதியில் தா. பழூர் ஒன்றியம் உள்ளது. தினமும் சுமார் 33 கிராமப் பஞ்சாயத்து மக்கள் வந்து செல்லுகின்ற மையப் பகுதி. தா. பழூர் ஒன்றிய அலுவலகம், காவல் நிலையம், கால்நடை மருந்தகம், அரசு மருத்துவமனை, இரண்டு வங்கிகள் மற்றும் மளிகை, ஜவுளி, காய்கறிக் கடைகள் உட்படப் பல வர்த்தக நிறுவனங்கள் உள்ளன. ஆனால், அரசு சார்பு நிறுவனமான காதி வஸ்திராலயம் இல்லை. அதனால், தா. பழூரில் காதி வஸ்திராலயம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்களின்மூலம் அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. கா. ராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக ஒரு கதர் அங்காடி துவக்க நகரப் பகுதியாகவோ, பேரூராட்சிப் பகுதியாகவோ இருக்க வேண்டும். இந்த தா. பழூர் பகுதி ஒரு கிராமம். கிட்டத்தட்ட 4,570 நபர்களே வாழ்கின்ற பகுதி. ஒரு கதர் அங்காடி அமைக்க வேண்டுமென்று சொன்னால், குறைந்தபட்சம் ஓராண்டுக்கு 5 இலட்சம் ரூபாய் வரையிலாவது விற்பனை செய்ய வேண்டும். இந்த ஊருக்கு அருகில் ஜெயங்கொண்டத்தில் ஏற்கெனவே ஒரு கதர் அங்காடி உள்ளது. 13 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. இந்த தா. பழூர் பகுதியிலுள்ள பஞ்சாயத்து யூனியன் அலுவலகத்தில் கிராமப் பொருட்களைப் பண்டிகைக் காலத்தில் விற்பனை செய்கிறபோதுகூட, தீபாவளி நேர காலத்திலேயே 15,000 ரூபாய்க்குமேல் விற்பனையாவதில்லை. எனவே, இந்தப் பகுதியில் காதி விற்பனை அங்காடி அமைக்கும் வாய்ப்பில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. இராஜேந்திரன்.

**திரு. க. இராஜேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கு வசிக்கின்ற மக்கள் மிகவும் ஏழை, பின்தங்கிய விவசாயப் பெருமக்களாவர். காதி வஸ்திராலயம் என்றால் என்னவென்றே தெரியாது. அதை அரசு விளக்க வேண்டும். காதிமூலம் தரமான, விலை குறைந்த கட்டில், பீரோ, இலவம் பஞ்சு மெத்தை, தலையணை, தேன், நாட்டு மருந்துகள்போன்ற பல பொருட்களை வழங்க முடியும். அந்தப் பகுதி மக்கள் அரியலூருக்கு 30 கிலோ மீட்டர் செல்ல வேண்டும். அந்தத் தா. பழூர் பார்டரிலிருந்து ஜெயங்கொண்டத்திற்கு 25 கிலோ

2007 ஏப்ரல் 4]

மீட்டர் செல்ல வேண்டும். அவர்களின் நலன் கருதி, தா. பழூரில் காதி வஸ்திராலயம் அமைக்க வேண்டுமாய் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்மூலம் அரசை வலியுறுத்துகின்றேன்.

*முற்பகல் 10–35*

**மாண்புமிகு திரு. கா. ராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் துறை அலுவலர்களை வைத்து மீண்டும் ஆய்வு செய்யச் சொல்லி, அப்படி ஒரு வாய்ப்பு இருக்குமானால் மீண்டும் அது பற்றிப் பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 11, மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி, மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**11—**

**துணை மின் நிலையம்**

***11818—திரு. அர. சக்கரபாணி:**

மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஜவ்வாதுப்பட்டியில் துணை மின் நிலையம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) ஜவ்வாதுப்பட்டியில் 110/22 கி.வோ. துணை மின் நிலையம் அமைப்பதற்கான கருத்துரு பரிசீலனையில் உள்ளது. வாரிய ஒப்புதல் அளிக்கப்பட்டுத் தேவையான நிலம் கையகப்படுத்தப்பட்டவுடன், 11–வது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் துணை மின் நிலையம் நிறுவுவதற்கான பணிகள் மேற்கொள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி.

**திரு. அர. சக்கரபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒட்டன்சத்திரம் தொகுதிக்குட்பட்ட ஜவ்வாதுப்பட்டியில் துணை மின்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS